செய்திவெளியீடு எண்.15/2018 நாள் 08.03.2018

**சென்னைக் குடிநீர் வாரியம் தொடர்பான மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களின் தனிப்பிரிவு மனுக்கள் மீது உடனடி நடவடிக்கை – சென்னைக் குடிநீர் வாரியத்திற்கு முதல் பரிசு மற்றும் பாராட்டு**

-----

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களின் தனிப்பிரிவு மூலம் பெறப்படும் பொதுமக்களின் குறைகளுக்கான புகார் மனுக்கள் அந்தந்த துறைகளுக்கு மேல் நடவடிக்கைகளுக்காக அனுப்பப்பட்டு பொதுமக்களின் குறைகளை நிவர்த்தி செய்வதற்கான நடவடிக்கைகளை அரசு எடுத்து வருகிறது.

கடந்த 2017 ஆம் ஆண்டு தமிழக முதலமைச்சர் அவர்களின் தனிப்பிரிவு மூலம் சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீர் அகற்று வாரியம் தொடர்பாக பெறப்பட்ட மொத்த மனுக்கள் 1094 (ஆயிரத்து தொண்ணுற்று நான்கு) இம் மனுக்கள் மீது வாரியத்தின் சார்பில் குறித்த நேரத்தில் நடவடிக்கை எடுக்கப்பட்டு பொதுமக்களின் குறைகள் உடனடியாக நிவர்த்தி செய்யப்பட்டதோடு அதற்கான உரிய பதிலையும் 31.12.2017க்குள் தனிப்பிரிவுக்கு வாரியம் சமர்ப்பித்துளளது. வாரியத்தின் உடனடி நடவடிக்கைகளை ஊக்கப்படுத்தும் நோக்கத்தோடு மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களின் தனிப்பிரிவின் பரிந்துரையின் பேரில் தமிழக அரசு சென்னைக் குடிநீர் வாரியத்திற்கு முதல் பரிசினை அறிவித்துள்ளதோடு பாராட்டு கேடயத்தினையும் வழங்கியுள்ளது.

சென்னை தலைமைச் செயலகத்தில் நடைபெற்ற மாவட்ட ஆட்சியர்கள் மற்றும் காவல் துறை அதிகாரிகள் மாநாட்டின் நிறைவு நாளன்று சென்னை குடிநீர் வாரியத்திற்கான முதல் பரிசுக்கான பாராட்டு சான்றிதழை மாண்புமிகு தமிழக முதலமைச்சர் திரு.எடப்பாடி கே.பழனிச்சாமி அவர்கள் வழங்க நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை முதன்மைச் செயலர் திரு. ஹர்மந்தர் சிங், இ.ஆ.ப., அவர்களும் சென்னைக் குடிநீர் வாரிய மேலாண்மை இயக்குநர் திரு.சத்யபிரத சாகு, இ.ஆ.ப., அவர்களும் கேடயத்தினை பெற்றுக் கொண்டார்கள்.

மக்கள் தொடர்பு மேலாளர்
சென்னைக் குடிநீர்